[1967 நவம்பர் 25

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஏற்கனவே இருந்த முதலமைச்சர் வேண்டுமானால் இதைப் பற்றிக் கவனிக்காத நிலை இருந்திருக்கலாம். முதல் முதலிலே பாம்பூர் பிர்க்காவிலேதான் பூச்சி மருந்து தெளிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி அந்த வட்டார எம். எல். ஏ.-க்களுக்கெல்லாம் தெரியப்படுத்தப்பட்டது. கனம் விநயகம் அவர்களுக்கு இது பற்றித் தெரியாததற்காக வருந்துகிறேன். திரு. விநயகம் அவர்கள் திருத்தணியில் நின்றதால் அங்கு பூச்சி அதிகமாகப் பரவியிருந்தால் அந்தப் பகுதியையும் கவனிக்கலாம்.

* 439 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to manufacture pesticides for the benefit of farmers?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இல்லை.

திரு. கே. விநயகம் : முன்பு கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளித்ததில் இருந்து பூச்சி மருந்து தயாரிக்கும் ஃபாக்டரிஸ் ஆரம்பிக்க வேண்டியது அவசியம் என்று விளங்குகிறது. அதற்கு நம்முடைய அரசில் போதிய அளவு நிதி இல்லையென்றால், மத்திய சர்க்காரிடம் இதைப்பற்றி எடுத்துச்சொல்லி மானியம் பெற்றுவது அதற்கான தொழிற்சாலையை ஆரம்பிக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்போது கோவையிலும், கோயில்பட்டியிலும், ஆடுதுறையிலும் இதற்கான ஆராய்ச்சி நிலையங்கள் துவக்கப்பட்டிருக்கின்றன. பூச்சி மருந்தை எந்த முறையில் உண்டாக்குவது, கலப்பது என்பது பற்றியெல்லாம் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. அந்த ஆராய்ச்சி வெற்றி பெற்றவுடன் கனம் அங்கத்தினர் ஒத்துழைப்பு, மத்திய சர்க்காரிலிருந்து நிதி பெற்றுத் தருவதற்கு இருக்குமானால், அதற்கான தொழிற்சாலையை ஆரம்பிப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. இந்த விஷயத்தில் கனம் அங்கத்தினர் அவர்கள் ஒத்துழைப்புக் கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. விநயகம் : அண்மையில் காஞ்சிபுரத்தில் நடந்த விவசாயிகள் மாநாட்டில், நமது முதலமைச்சர் அவர்களும், விவசாய அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டார்கள். அங்கே, விவசாயிகளுக்குத் தேவையான அளவு மருந்துகள் கிடைப்பதில்லை என்று எடுத்துச் சொல்லப்பட்டது. இந்த மருந்து கிடைப்பது குறைவாக இருக்கிறதா அல்லது மருந்து விநியோகம் செய்வதிலே கோளாறு இருக்கிறதா ? குறைவாக இருந்தால், அதிக அளவு ஷேர், கோட்டா மத்திய சர்க்காரிடமிருந்து கேட்டுப் பெறுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா ?

1967 நவம்பர் 25]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: பூச்சி மருந்து கிடைப்பதிலே எந்தவிதமான தகராறும் இல்லை. தேவையான அளவுக்குப் பூச்சி மருந்து வருகிறது. (திரு. கே. விநாயகம்: நான் யூரியாவைப் பற்றிச் சொன்னேன்.) யூரியா என்பது உரம். உரத்திற்கும் பூச்சி மருந்திற்கும் வித்தியாசம் தெரியாமல் . . .

THIRU K. VINAYAKAM : He is making a mistake. He is wrongly quoting me.

THE HON. THIRU A. GOVINDASAMY : I am not wrongly quoting him.

THIRU K. VINAYAKAM : He gives to the House the impression that I do not know the difference between pesticide and fertiliser.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. விநாயகம் அவர்கள், 'தன்னிலை விளக்கம்' கூற விரும்பினால், பிறகு கூறிக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : உரத்திற்கும் பூச்சி மருந்திற்கும் அவர்களுக்கு வித்தியாசம் தெரியாது என்று நான் சொல்லவில்லை. அவர்கள் கேள்வி கேட்கும்போது சொன்னது பூச்சி மருந்தைப் பற்றி. அவர்களுக்கு விவரம் தெரியாது என்ற அந்த அளவுக்கு நான் சொல்லமாட்டேன். அவர்களைப் பற்றி அவ்வளவு குறைவாகச் சொல்லமாட்டேன். பூச்சி மருந்தைப் பற்றியவரை எந்தவிதமான குறைபாடும் கிடையாது. தேவையான அளவுக்கு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்தப் பகுதியில் கிடைக்கவில்லையோ, அங்கிருந்து உடனடியாக அரசாங்கத்திற்கு எழுதினால் நிச்சயமாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். யூரியா கிடைக்கவில்லை என்ற குறைபாடு ஓரளவு இருந்தாலும் கூட, உயர் ரக நெல்லை விளைவிப்பவர்களுக்கெல்லாம் தேவையான அளவுக்கு கார்டு மூலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலும் எந்த விதமான குறைபாடும் கிடையாது.

புது போலீஸ் நிலையங்கள்

* 430 வினா—திரு. ஈ. எம். நடராசன் : மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோவை மாவட்டம், பவானி தாலூகாவில் அதிகமான அளவில் நடை பெறும் கிரிமினல் குற்றங்களைக் குறைக்கும் வகையில் அங்கு போலீஸ் நிலையங்கள் அதிகமாக ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இல்லை.